# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 11,663 — 1959 පෙබරවාරි 10 වැනි අඟහරුවාදා — 10.2.1959

11,663 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு மாசி மாதம் 10 ந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## விலைக் கட்டளைகள்

**விலைக் கட்டளை இல. எவ்./சீ./வீ. எஸ். எவ். 3 (4).** **ஆட்டிறைச்சி.**

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினாலும் 3 (2) ம் பிரிவினாலும் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு கொழும்பு மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), சில்வெஸ்டர் ஜஸ்டின் விஜயசேகர ஆகிய நான் இக்கட்டளையால்—

(i) 1958 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5 ந் திகதி வெளிவந்த 11,469 ம் இலக்க விசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட எவ். சீ./வீ. எஸ். எவ் 3 (3) இலக்கமுள்ள எனது விலைக்கட்டளையை இத்திகதியிலிருந்து எடுத்து விடுகிறேன்;

(ii) இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம், 3 ம், 4 ம் பத்தியின் தொடக்கத்தில் விபரிக்கப்பட்டிருக்கும் ஆட்டிறைச்சி இருத்தல் ஒன்றுக்கு ஆகக்கூடிய விலைகளாகும். அட்டவணை 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் எல்லைகளுக்குள் இந்த விலைகளுக்கு மேலாக விற்றலாகாது ;

(iii) இக்கட்டளையின் நோக்கத்துக்காக :—

(அ) " ஆட்டிறைச்சி " என்பது செம்மறி அல்லது வெள்ளாட்டின் தசையாகும். ஆனால் கழிவுகள் இதில் சேர்க்கப்படமாட்டாது ;

(ஆ) மிருகங்கள் வெட்டப்படுமிடத்தில் விற்பதற்காக தயார்செய்த செம்மறி அல்லது வெள்ளாட்டின் உடல் (தலை, தோல், குடல், குளைகள், குளம்பு மற்றும் வழக்கமாக கழிக்கப்படும் உறுப்புகள் தவிர்த்து) விற்கப்படுமிடத்து அவ்விற்பனை பருமட்டான நிறையாகக் கருதப்படும் ;

(iv) எலும்புடன் ஆட்டிறைச்சி விற்கப்படுமிடத்து அதனுடன் இருக்கும் எலும்பு மொத்த நிறையின் 25 சத விகிதத்திற்கு மேற்படாமலிருக்கவேண்டும் ;

(v) இக்கட்டளையால் ஆகக்கூடுதலான விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பகுதியிலிருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் தன்னிடமோ அல்லது தன் பொறுப்பில் வேறு ஒரு இடத்திலோ வாகனத்திலோ அல்லது பாத்திரத்திலோ, அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆட்டிறைச்சி இருப்பின் அவற்றின் விலையும் விபரமும் அப்பகுதிக்கு இக்கட்டளையால் விதிக்கப்பட்டுள்ளபடி அறிவித்தல் ஒன்றை பகிரங்கமாக பார்வைக்கு வைத்தல் வேண்டும் ;

(vi) ஆட்டிறைச்சி கழிவுகளுடன் விற்கப்படுமிடத்து இறைச்சியும் கழிவும் தனித்தனி நிறுத்து விற்கப்படல் வேண்டும் ;

(vii) ஒவ்வொரு வியாபாரியும் ஆட்டிறைச்சி விற்குமிடத்து ஆட்டிறைச்சி வாங்குபவர் தான் வாங்கும் இறைச்சியின் சரியான நிறையை இலகுவில் அவதானிக்கக் கூடியவகையில் நிறுவை தராசு அல்லது தராசுகள் வைக்கப்படல் வேண்டும் ;

(viii) இத்துடன் இணைந்த அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஏதாவது ஆட்டிறைச்சி விற்கும் ஒவ்வொரு வியாபாரியும் ஆட்டிறைச்சி வாங்குபவர் கேட்குமிடத்து பின்வருவன கொண்ட பற்றுச் சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டும் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்கப்பட்ட ஆட்டிறைச்சியின் அளவு (நிறையில்) ;

(இ) விற்கப்பட்ட ஆட்டிறைச்சியின் விபரம் ;

(ஈ) விற்கப்பட்ட ஆட்டிறைச்சியின் விலை ;

(ix) இக்கட்டளையால் ஆகக்கூடுதலான விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பகுதியிலும் அட்டவணையிற் விபரிக்கப்பட்டுள்ள இறைச்சிகளுடன் வேறு வித இறைச்சியையோ, தசையையோ கலந்து விற்றலாகாது ;

(x) அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள பொருட்கள் விற்கப்படுமிடத்து அப்பொருளை சுற்றிக் கொடுக்கும் அல்லது வைத்துக் கொடுக்கும் பொருளின் விலையும் அட்டவணையின் 2 ம், 3 ம், 4 ம் பத்திகளில் குறிக்கப்பட்டுள்ள ஆகக் கூடுதலான விலைகளில் அடங்க வேண்டும் ;

(xi) இக்கட்டளையின் நோக்கத்துக்காக " இருத்தல் " அல்லது " இரு " என்பது " அவோர்டுபோஸ் " எடுத்தலளவையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படும்.

1959 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 9 ந் திகதி முற்பகல் 11.20 மணிக்கு கொழும்புக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

எஸ். ஜே. விஜயசேகர,
உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு), கொழும்பு மாவட்டம்.

அட்டவணை

ஆட்டிறைச்சிக்கு ஆகக்கூடிய விலை

| பத்தி 1 எல்லை | பத்தி 2 ஆட்டிறைச்சி (எலும்பில்லாமல்) ஆகக் கூடிய விலை ரூ. ச. | பத்தி 3 ஆட்டிறைச்சி (எலும்புடன்) ஆகக்கூடிய விலை ரூ. ச. | பத்தி 4 ஆட்டிறைச்சி (பரிமாண நிறை) ஆகக்கூடிய விலை ரூ. ச. |
|---|---|---|---|
| (1) பிலியந்தலை பட்டின சபை எல்லைகள் | 2 00 | 1 75 | 1 50 |
| (2) ஹெந்தலை, வத்தளை கிராமச் சங்க எல்லைகள் | 2 25 | 2 00 | 1 70 |
| (3) வெயங்கொடை பட்டின சபை எல்லைகள் | 2 50 | 2 00 | 1 70 |
| (4) கனுவன கிராமச் சங்க எல்லைகள் | 2 25 | 2 00 | 1 70 |
| (5) அவிஸ்ஸாவெலை நகர சபை எல்லைகள் | 2 50 | 2 15 | 1 70 |
| (6) அத்துருகிரிய கிராமச் சங்க எல்லைகள் | 2 25 | 1 95 | 1 70 |
| (7) மினுவங்கொடை பட்டின சபை எல்லைகள் | 2 25 | 2 00 | 1 70 |
| (8) கொழும்பு மாவட்டம் (கொழும்பு மாநகர சபை எல்லைகள் தவிர்ந்த, பிலியந்தலை பட்டின சபை எல்லைகள், ஹென்தலை, வத்தளை கிராமச் சங்க எல்லைகள், கனுவன கிராமச் சங்க எல்லைகள், வெயங்கொடை பட்டின சபை எல்லைகள், அவிஸ்ஸாவெலை நகர சபை எல்லைகள், அதுறுகிரிய கிராமச் சங்க எல்லைகள், மினுவங்கொடை பட்டின சபை | 2 15 | 1 85 | 1 60 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்க வேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல; இவை **ஆகக்கூடிய** விலைகளாகும்; இவ்விலைகளுக்கு மேல்ாக அப்பொருட்களை விற்றலாகாது.

---

விலைக் கட்டளை இலக்கம் எப். சீ./வீ.—எஸ். எப். 1 (20). உப உணவுப் பொருட்கள் (மாசிக் கருவாடு)

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினாலும் 3 (2) ம் பிரிவினாலும் விலைக்கட்டுப்பாட்டதிகாரிக்கு (உணவு), அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு கொழும்பு மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), சில்வெஸ்டர் ஜஸ்டின் விஜயசேகர ஆகிய நான் இக்கட்டளையால்—

(i) 1958 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20 ந் திகதி, வெளிவந்த 11,478 ம் இலக்க விசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் 1958 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20 ந் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட எப். சீ./வீ. எஸ். எப். I (16) என்னும் இலக்கமுள்ள எனது உணவு விலைக் கட்டளையை இத்தேதியிலிருந்து எடுத்துவிடுகிறேன்;

(ii) இதனோடிருக்கும் அட்டவணையின் 3 ம், 4 ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் பொருட்களின் விலைகளை நிகர அந்தர் ஒன்றை மொத்த வியாபாரிக்கு விற்கும் ஆகக்கூடிய மொத்த விலையாகவும், சில்லறை வியாபாரியின் நிகர இருத்தலுக்கு ஆகக்கூடிய சில்லறை விலையாகவும் உடனடியே நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன்;

(iii) இக்கட்டளையின் நோக்கத்துக்காக :—

(அ) எத்தொகையான மாசிக்கருவாட்டையோ திருப்பி விற்பதற்காக விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படும்;

(ஆ) எத்தொகையான மாசிக் கருவாட்டையோ பாவிப்புக்காக அல்லது உபயோகத்துக்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படும்;

(இ) ஒரு நிகர அந்தருக்குக் குறைந்த அல்லது கூடிய மாசிக் கருவாடு மொத்தமாக விற்கப்படின், இங்கு குறிப்பிட்டுள்ள ஆகக் கூடிய மொத்த விற்பனை விலையிலிருந்து தக்கவாறு வழமைபோல் கணக்குப் பார்க்கப்பட வேண்டும்;

(iv) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள எல்லைகளுக்குள் அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்டுள்ள மாசிக் கருவாட்டை வேறு எந்தப் பொருளோடும் கலந்து விற்றலாகாது;

(v) இக்கட்டளையால் ஆகக்கூடுதலான விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பகுதியிலிருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் தன்னிடமோ அல்லது தன் பொறுப்பில் வேறு இடத்திலோ அல்லது வாகனத்திலோ அட்டவணை 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட மாசிக் கருவாடு இருப்பின் அவற்றின் ஆகக்கூடிய விலைகளைக் காட்டும் அறிவித்தல் ஒன்றை அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டும்;

(vi) இக்கட்டளையின் நோக்கத்துக்காக "இருத்தல்" அல்லது "இரு." என்பது "அவோர்டுபோஸ்" நிறுத்தலளவையின் பிரமாண இருத்தல் நிறையாகும்;

(vii) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்ட ஒவ்வொரு பகுதியிலும் அட்டவணை 1 ம் பத்தியில் விவரிக்கப்பட்ட மாசிக் கருவாட்டை மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும், சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு பற்றுச் சீட்டு ஒன்றைக் கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்;

(அ) விற்பனை நடந்த திகதி;

(ஆ) விற்பனை செய்த மாசிக் கருவாட்டின் தொகை (நிறையில்);

(இ) விற்பனை செய்த தொகைக்குக் கொடுக்கப்பட்ட விலை;

(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது :

(viii) குறித்த அட்டவணையின் 3 ம், 4 ம் பத்திகளில் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் மாசிக் கருவாட்டை சுற்றிக் கொடுக்கும் உறை அல்லது வைத்துக்கொடுக்கும் பொருள் ஏதாவது உபயோகிக்கப்படின், அதன் விலையும் அடங்க வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1959 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 9 ந் திகதி முற்பகல் 11.20 மணிக்கு கொழும்புக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

எஸ். ஜே. விஜயசேகர,
உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு), கொழும்பு மாவட்டம்.

### அட்டவணை

| 1 ம் பத்தி<br>விபரம் | 2 ம் பத்தி<br>எல்லைகள் | 3 ம் பத்தி<br>நிகர அந்தர் ஒன்றுக்கு மொத்த வியாபாரியின் ஆகக் கூடிய மொத்த விலை<br>ரூ. ச. | 4 ம் பத்தி<br>நிகர இருத்த ஒன்றுக்கு சில்லறை வியாபாரியின் ஆகக் கூடிய சில்லறைக் விலை<br>ரூ. ச. |
|---|---|---|---|
| மாசிக் கருவாடு எல்லா இரகங்களும் | (1) ஹாப்பிற்றிகம் கோறளை | 248 27 | 2 41 |
| | (2) அளுத்குறு கோறளை வடக்கு " அ " | 248 01 | 2 41 |
| | (3) அளுத்குறு கோறளை வடக்கு " ஆ " | 247 95 | 2 41 |
| | (4) அளுத்குறு கோறளை தெற்கு | 247 75 | 2 41 |
| | (5) சியான்னே கோறளை கிழக்கு | 248 01 | 2 41 |
| | (6) சியான்னே கோறளை மேற்கு (அதிகாரிப்பற்று) | 247 67 | 2 41 |
| | (7) சியான்னே கோறளை மேற்கு (மெத பற்று) | 247 77 | 2 41 |
| | (8) ஹேவாகம் கோறளை | 247 85 | 2 41 |
| | (9) சல்பிற்றிக் கோறளை | 247 77 | 2 41 |
| | (10) கொழும்பு நகர் தவிர்ந்த கொழும்பு காரியாதிகாரியின் பிரிவு | 247 69 | 2 40 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல ; இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருட்களை விற்றலாகாது.

---

விலைக் கட்டளை இல. எவ். சி/வி. எஸ். 7 (3). **மாட்டிறைச்சி.**

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினாலும் 3 (2) ம் பிரிவினாலும் எனக்கு அளிக்கப்பட்டிருக்கும் தத்துவங்களைக் கொண்டு கொழும்பு மாவட்ட உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு), சில்வெஸ்டர் ஜஸ்டின் விஜயசேகர ஆகிய நான் இக்கட்டளையால்—

(i) 1958 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20 ம் திகதி வெளிவந்த 11,478 இலக்க விசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட எப். சீ/வி. எஸ். எவ் 7 (2) இலக்கமுள்ள எனது விலைக் கட்டளையை இத்திகதியிலிருந்து எடுத்து விடுகிறேன்:

(ii) இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம், 3 ம், 4 ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளே அப்பத்திகளின் தலைப்பில் விபரிக்கப்பட்டிருக்கும் நாட்டு மாட்டிறைச்சி ஒரு இருத்தலுக்கு ஆகக் கூடிய விலைகளாகும். அட்டவணை 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் எல்லைகளுக்குள் இந்த விலைகளுக்கு மேலாக நாட்டு மாட்டிறைச்சி விற்கக்கூடாது என ஆணையிடுகிறேன்.

(iii) இக்கட்டளையின் நோக்கத்திற்காக :—

(அ) " நாட்டு மாட்டிறைச்சி " என்பது வளர்க்கப்பட்ட இந்திய அல்லது சிங்கள மாட்டின் அல்லது எருமையின் கழிவு உறுப்புக்கள் தவிர்ந்த சதையாகும் ;

(ஆ) மிருகங்கள் வெட்டப்படுமிடத்தில் விற்பனைக்காக தயார் செய்த எந்த மிருகத்தின் உட்லும் (அதாவது தலை, தோல், குடல், குரை, குளம்பு மற்றும் வழக்கமாக கழிக்கப்படும் உறுப்புக்கள் தவிர்ந்த) விற்கப்பட்டால் அவ்விற்பனை பருமட்ட நிறையாக விற்றதாகக் கருதப்படும்.

(iv) எலும்புடன் நாட்டு மாட்டிறைச்சி விற்கப்பட்டால் அவ்விதம் விற்கப்படும் இறைச்சியில் எலும்புகள் 25 சத வீதத்திற்கு மேற்படக் கூடாது என விதிக்கிறேன்.

(v) இதனோடிருக்கும் அட்டவணையின் 1 ம் பத்தியில் குறிக்கப்பட்டிருக்கும் எல்லைகளுக்குள் எவ்விடத்திலாவது அட்டவணையில் விபரிக்கப்பட்டிருக்கும் நாட்டு மாட்டிறைச்சி விற்பனைக்காக வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் இக்கட்டளையால் விதிக்கப்பட்டிருக்கும் ஆகக் கூடிய விலைகள் அடங்கிய அறிவித்தல் ஒன்றை பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென விதிக்கிறேன்.

(vi) நாட்டு மாட்டிறைச்சி, அதற்கெனப் பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்ட குடில்களிலே விற்கப்படவோ அல்லது விற்பனைக்காக வைக்கப்பட வேண்டுமெனவும் அக்குடில்களில் வேறு எந்த ரக இறைச்சியும் விற்கப்படவோ அல்லது விற்பனைக்காகவோ வைக்கக் கூடாது.

(vii) இதனோடிருக்கும் அட்டவணையின் 1 ம் பத்தியில் குறிக்கப்பட்டிருக்கும் எல்லைகளுக்குள் எந்த குடத்திலாவது அட்டவணையில் விபரிக்கப்பட்டிருக்கும் நாட்டு மாட்டிறைச்சி வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் செய்யுமிடத்தில் நாட்டு மாட்டிறைச்சி மட்டுமே விற்கப்படும் எனக் குறிப்பிடும் அறிவித்தல் ஒன்றை பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டும்.

(viii) நாட்டு மாட்டிறைச்சியும் கழிவு உறுப்பும் சேர்த்து ஒரு முறையில் விற்கப்படின் நாட்டு மாட்டிறைச்சி தனியாக நிறுக்கப்பட்டு புறம்பாக விற்கப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு வியாபாரியும் நாட்டு மாட்டிறைச்சி விற்கும்போது உபயோகப்படுத்தும் தராசுகளை வாங்குபவர் பார்வையிட்டு வாங்கும் நாட்டு மாட்டிறைச்சியின் உண்மை நிறையை சுலபமாக அறிந்து கொள்ளும் விதமாக வைக்க வேண்டும்.

(x) இதனோடிருக்கும் அட்டவணையில் விபரிக்கப்பட்டிருக்கும் நாட்டு மாட்டிறைச்சி விற்பனை செய்யும் ஒவ்வொரு வியாபாரியும், நாட்டு மாட்டிறைச்சி வாங்குபவர் கேட்குமிடத்து, கீழ்வரும் விபரங்கள் அடங்கிய பற்றுச் சீட்டொன்று கொடுக்க வேண்டும்.

(அ) விற்ற திகதி;

(ஆ) விற்ற நாட்டு மாட்டிறைச்சியின் அளவு (நிறையில்);

(இ) விற்ற நாட்டு மாட்டிறைச்சியின் விபரம்;

(ஈ) விற்ற நாட்டு மாட்டிறைச்சியின் அளவுக்குக் கொடுக்கப்பட்ட விலை.

(xi) இக்கட்டளையால் ஆகக் கூடிய விலைகள் விதிக்கப்பட்ட எல்லைகளுக்குள் எவரும், இதனோடிருக்கும் அட்டவணையில் விபரிக்கப்பட்டிருக்கும் பொருட்களை வேறு எந்த இறைச்சியோடும் அல்லது சதையோடும் கலந்து விற்கக்கூடாது.

(xii) இதனோடிருக்கும் அட்டவணையில் குறிக்கப்பட்டிருக்கும் பொருட்களை விற்கப்படும்போது அவற்றைச் சுற்றிக்கொடுக்கும் உறை அல்லது கொள்கலம் ஏதாவது உபயோகித்தால் அவற்றின் விலையும் இதனோடிருக்கும் அட்டவணையின் 2ம், 3 ம், 4 ம் பத்திகளில் குறிக்கப்பட்டிருக்கும் ஆகக் கூடிய விலைகளுக்குள் அடங்க வேண்டும்.

(xiii) இக்கட்டளையின் நோக்கத்திற்காக " இருத்தல் " அல்லது " இரு. " என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படும்.

1959 ம் ஆண்டு தை மாதம் 9 ம் திகதி மு.ப. 11.20 மணிக்கு கையொப்பமிடப்பட்டது.

எஸ். ஜே. விஜயசேகர
உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
கொழும்பு மாவட்டம்.

அட்டவணை

நாட்டு மாட்டிறைச்சிக்கு ஆகக் கூடிய விலை

| | பத்தி 1<br>எல்லை | பத்தி 2<br>நாட்டு மாட்டிறைச்சி (எலும்பில்லாமல்) 1 இருத்தலுக்கு ஆகக் கூடிய விலை | பத்தி 3<br>நாட்டு மாட்டிறைச்சி (எலும்புடன்) 1 இருத்தலுக்கு ஆகக் கூடிய விலை | பத்தி 4<br>நாட்டு மாட்டிறைச்சி (பரிமாண நிறை) 1 இருத்தலுக்கு ஆகக் கூடிய விலை |
|---|---|---|---|---|
| | | ச. | ச. | ச. |
| 1. | தெஹிவலை, கல்கிஸ்ச நகரசபை எல்லைகள், கோட்டை நகரசபை எல்லைகள், அதுருஹிரிய கிராமச் சங்க எல்லைகள் :— .. | 95 .. | 80 .. | 70 |
| 2. | மொரட்டுவ நகரசபை எல்லைகள், பிலியந்தலை பட்டினசபை எல்லைகள், வெயங்கொடை பட்டினசபை எல்லைகள் :— .. | 90 .. | 75 .. | 65 |
| 3. | வத்தலை, ஹெளந்தலை கிராமச்சங்க எல்லைகள், கனுவன கிராமச் சங்க எல்லைகள், அவிஸ்சாவெலை நகரசபை எல்லைகள் :— .. | 85 .. | 70 .. | 60 |
| 4. | மினுவங்கொடை பட்டினசபை எல்லைகள் :— .. | 85 .. | 70 .. | 60 |
| 5. | கொழும்பு மாவட்டம் (கொழும்பு மாநகர எல்லைகள் தவிர்ந்த) தெஹிவலை, கல்கிஸ்ச நகரசபை எல்லைகள், கோட்டை நகரசபை எல்லைகள், அதுருஹிரிய கிராமச் சங்க எல்லைகள், மொரட்டுவ கிராமச் சபை எல்லைகள், பிலியந்தலை பட்டினசபை எல்லைகள், வெயங்கொடை பட்டினசபை எல்லைகள், வத்தலை, ஹெளந்தலை கிராமச் சங்க எல்லைகள், கனுவன கிராமச் சங்க எல்லைகள், அவிஸ்சாவெலை நகரசபை எல்லைகள், மினுவங்கொடை பட்டினசபை எல்லைகள் :— .. | 80 .. | 65 .. | 55 |

**குறிப்பு** :—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல ; இவை ஆகக்கூடிய விலைகளாகும் ; இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருட்களை விற்றலாகாது.

---

உணவு விலைக்கட்டளை இல. MT/1/59. — உப உணவுப் பொருட்கள் (மாசிக் கருவாடு).

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினால் அச்சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் (மாத்துறை டிஸ்திறிக்) உப விலைக் கட்டுப்பாட்டதிகாரிக்கு (உணவு) அளிக்கப்பட்டுள்ள, ஹெட்டிகே டொன்டியுடர் போதிதாஸ ஆகிய யான் இக்கட்டளையால் —

(1) 1958 ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 23 ம் திகதியைக் கொண்ட 11,480 ம் இலக்க இலங்கை அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில் 1958 ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 18 ம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட MT/9/58 என்னும் இலக்கமுள்ள உணவு விலைக் கட்டளையில் மொத்த வியாபாரிகளின் ஆகக் கூடிய மொத்த விலைகள், சில்லறை வியாபாரிகளின் ஆகக்கூடிய சில்லறை விலைகள் முதலிய வற்றை பொறுத்த மட்டில் குறித்த 1 ம், 2 ம் அட்டவணைகளின் 2 ம் பத்தியில் குறித்துள்ள மாசிக் கருவாடு பற்றிய எனது விலைக் கட்டளையையும் 1959 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 1 ந் திகதியிலிருந்து எடுத்து விடுகிறேன்.

(2) இதனோடிருக்கும் 1 ம் 2 ம் அட்டவணைகளின் 2 ம் பத்தியில் விவரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே நிகர அந்தர் ஒன்றின் மொத்த வியாபாரியின் ஆகக் கூடிய மொத்த விற்பனை விலையாகவும், நிகர இருத்தல் ஒன்றைச் சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக் கூடிய சில்லறை விலையாகவும், 1959 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 1 ந் திகதியிலிருந்து விதிக்கின்றேன். குறித்த இரண்டு அட்டவணைகளின் 2 ம் பத்தியில் குறிக்கப்பட்டுள்ள விலைகளுக்குக் கூடுதலாக 1 ம் பத்தியில் குறிக்கப்பட்டுள்ள பகுதிகளில் விற்றலாகாது.

(3) இக்கட்டளையின் நோக்கத்துக்காக :—

(அ) எத்தொகையான மாசிக் கருவாட்டையோ திருப்பி விற்பதற்காக விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படும் என்றும் ஆஞ்ஞையிடுகிறேன் ;

(ஆ) எத்தொகையான மாசிக் கருவாட்டையோ பாவிப்புக்காக அல்லது உபயோகத்துக்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன் ;

(இ) ஒரு நிகர அந்தருக்குக் குறைந்த அல்லது கூடிய மாசிக் கருவாடு மொத்தமாக விற்கப்படின், இங்கு குறிப்பிட்டுள்ள ஆகக் கூடிய மொத்த விற்பனை விலையிலிருந்து தக்கவாறு வழமைபோல் கணக்குப்பார்க்கப்பட வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(4) இக்கட்டளையால் இரண்டு அட்டவணைகளில் 1 ம் பத்தியில் குறிக்கப்பட்டுள்ள எல்லைப் பகுதிக்குள் மாசிக் கருவாட்டை வேறொரு பொருளோடு கலந்து விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன்.

(5) இக்கட்டளையால் இரண்டு அட்டவணைகளில் 1 ம் பத்தியில் குறிக்கப்பட்டுள்ள எல்லைப் பகுதிக்குள் மாசிக் கருவாட்டை தம் வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் குறித்த இரண்டு அட்டவணையின் 2 ம் பத்தியில் விவரித்துள்ள மாசிக்கருவாட்டுக்கு அவ்விடப்பரப்பில் இக்கட்டளையால் விதிக்கப்பட்ட ஆகக் கூடிய விலைகளைக் காட்டும் அறிவித்தல் ஒன்றைப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென இத்தால் ஆஞ்ஞையிடுகிறேன்.

(6) இக்கட்டளையின் நோக்கத்திற்காக " இருத்தல் ", அல்லது " இரு. ", என்பது " அவோர்டுபோஸ் " எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் முறையாகக் கருதப்படுமென்று ஆஞ்ஞையிடுகிறேன்.

(7) இக்கட்டளையால் இரண்டு அட்டவணைகளில் 1 ம் பத்தியில் குறிக்கப்பட்டுள்ள எல்லைப் பகுதிக்குள் மாசிக் கருவாட்டை மொத்தமாக விற்கும், சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்துப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச் சீட்டு ஒன்றைக் கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்பனை செய்யப்பட்ட மாசிக் கருவாட்டின் தொகை (நிறையில்) ;

(இ) விற்ற தொகைக்குக் கொடுக்கப்பட்ட விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது.

(8) இக்கட்டளையால் மாசிக் கருவாடு விற்குமிடத்து குறித்த இரண்டு அட்டவணைகளின் 2 ம் பத்தியில் குறிக்கப்பட்டுள்ள ஆகக் கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக் கொடுக்கும் உறை அல்லது கொள்கலம் ஏதாவது உபயோகப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1959 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 3 ந் திகதி மு. ப. 10 மணியளவில் மாத்துறைக் கச்சேரியில் கைச்சாத்திடப்பட்டது.

எச். டீ. டி. போதிதாஸ்,
உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
மாத்துறை டிஸ்திறிக்.

**முதலாம் அட்டவணை**

நிகர அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த விலை

| பத்தி 1<br>பகுதி | பத்தி 2<br>மாசிக் கருவாடு எல்லா வகைகளும்<br>ரூ. ச. |
|---|---|
| மாத்துறை நகரசபை எல்லைப்பகுதி<br>தெய்வந்துறை பட்டினச் சபை எல்லைப்பகுதி<br>தெய்வந்துறை கிராமச்சபை எல்லைப்பகுதி<br>கெகனதுறை கிராமச்சபை எல்லைப் பகுதி<br>மெடிஹ-கொடகம கிராமச்சபை எல்லைப்பகுதி<br>மாளிம்பொட கிராமச்சபை எல்லைப்பகுதி<br>மொளத்துவ கிராமச்சபை எல்லைப்பகுதி<br>நாவிம்மன-மாகாவிட கிராமச்சபை எல்லைப்பகுதி | 242 00 |
| வெலிகாம நகரசபை எல்லைப் பகுதி<br>வெலிகாம கிராமச்சபை எல்லைப் பகுதி | 241 90 |
| அகுரஸ்ஸ கிராமச்சபை எல்லைப் பகுதி<br>கொடபிடிய கிராமச்சபை எல்லைப்பகுதி | 242 25 |
| ஹக்மன கிராமச்சபை எல்லைப்பகுதி<br>கம்புறுபிடிய கிராமச்சபை எல்லைப்பகுதி<br>கந்தபிடவளகட கிராமச்சபை எல்லைப்பகுதி<br>திக்வெல்லை கிராமச்சபை எல்லைப்பகுதி | 242 45 |
| மொறவக்க கிராமச் சபை எல்லைப்பகுதி | 242 50 |
| பெறளபனுதற கிராமச்சபை எல்லைப்பகுதி<br>தெனியாய கிராமச் சபை எல்லைப் பகுதி | 242 75 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருளை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல ; இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருளை விற்றலாகாது.

**இரண்டாம் அட்டவணை**

இருத்தல் ஒன்றின் ஆகக்கூடிய சில்லறைவிலை

| பத்தி 1<br>பகுதி | பத்தி 2<br>மாசிக் கருவாடு எல்லா வகைகளும்<br>ரூ. ச. |
|---|---|
| மாத்துறை நகரசபை எல்லைப்பகுதி<br>தெய்வந்துறைப் பட்டினச்சபை எல்லைப்பகுதி<br>தெய்வந்துறை கிராமச்சபை எல்லைப் பகுதி<br>கெகனதுறை கிராமச்சபை எல்லைப் பகுதி<br>மெடிஹ-கொடகம கிராமச்சபை எல்லைப்பகுதி<br>மொளத்துவ கிராமச்சபை எல்லைப் பகுதி<br>நாவிம்மன-மாகாவிட கிராமச்சபை எல்லைப்பகுதி<br>மாளிம்பொட கிராமச்சபை எல்லைப் பகுதி<br>வெலிகாம நகரசபை எல்லைப் பகுதி<br>வெலிகாம கிராமச்சபை எல்லைப் பகுதி<br>அகுரஸ்ஸ கிராமச்சபை எல்லைப் பகுதி<br>கொடபிடிய கிராமச்சபை எல்லைப்பகுதி<br>ஹக்மன கிராமச்சபை எல்லைப் பகுதி<br>கம்புறுப்பிடிய கிராமச்சபை எல்லைப்பகுதி<br>கந்தபிடவளகட கிராமச்சபை எல்லைப்பகுதி<br>திக்வெல்லை கிராமச்சபை எல்லைப் பகுதி<br>மொறவக்க கிராமச்சபை எல்லைப்பகுதி<br>பெறளபனுதற கிராமச்சபை எல்லைப் பகுதி<br>தெனியாய கிராமச்சபை எல்லைப் பகுதி | 2 42 |

**குறிப்பு.**—இவ்விலை மேலே சொல்லப்பட்ட பொருளை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலை அல்ல ; இது **ஆகக்கூடிய** விலையாகும். இவ்விலைக்குமேல் விற்றலாகாது.

உணவு விலைக் கட்டளை இல. 54 — உப உணவுப் பொருட்கள் (மாசிக் கருவாடு).

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினால் 3 (2) பிரிவின் பிரகாரம் விலைக் கட்டுப்பாட்டதிகாரிக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு விலைக் கட்டுப்பாட்டதிகாரி, தம்பையா சிவஞானம் ஆகிய நான் இக்கட்டளையால்—

1. 1959 ம் ஆண்டின் பெப்ரவரி மாதம் 1 ம் திகதியன்று விலைக் கட்டுப்பாட்டின் இலக்கம் 50. 1958 ஆகஸ்ட் மாதம் 26 ம் திகதியும் இலங்கை அரசாங்க கெசட் இல : 11,511 திகதி, 2 செப்டம்பர், 1958 லும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆகக்கூடிய மொத்த விலையாகவும் சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும் இதனோடிருக்கும் அட்டவணையில் 2 இருந்து 7 பத்தியில் விபரிக்கப்பட்ட மாசிக் கருவாட்டின் விலை கொடுக்கப்பட்டுள்ளது.

2. இதனோடிருக்கும் அட்டவணையில் 2, 5, 6, 7 பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே நிகர அந்தர் ஒன்றின் மொத்த வியாபாரியின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலையாகவும், நிகர இருத்தல் ஒன்றை சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும் 1959 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 1 ந் திகதியிலிருந்து விதிக்கிறேன்.

3. இக்கட்டளையின் நோக்கத்துக்காக—

(அ) எத்தொகையான மாசிக் கருவாட்டையோ திருப்பி விற்பதற்காக விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படும் என்றும் ஆஞ்ஞையிடுகிறேன் ;

(ஆ) எத்தொகையான மாசிக் கருவாட்டையோ பாவிப்புக்காக அல்லது உபயோகத்துக்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படும் என்றும் ஆஞ்ஞையிடுகிறேன் :

(இ) ஒரு நிகர அந்தருக்கு குறைந்த அல்லது கூடிய மாசிக் கருவாடு மொத்தமாக விற்கப்படின், இங்கு குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய மொத்த விற்பனை விலையிலிருந்து தக்கவாறு வழமைபோல் கணக்குப் பார்க்கப்படவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

4. இக்கட்டளையால் அம்பாந்தோட்டை நகரசபை எல்லைக்குள் மாசிக் கருவாட்டை வேறொரு பொருளோடு கலந்து விற்கலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன்.

5. இக்கட்டளையால் அம்பாந்தோட்டை நகரசபை எல்லைக்குள் மாசிக்கருவாட்டை தம் வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது வைத்து இருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் குறித்த முதலாம் அட்டவணையில் விவரித்துள்ள மாசிக் கருவாட்டுக்கு அவ்விடப்பரப்பில் இக்கட்டளையால் விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளைக் காட்டும் அறிவித்தல் ஒன்றைப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்திருத்தல் வேண்டுமென இத்தால் ஆஞ்ஞையிடுகிறேன்.

6. இக்கட்டளையின் நோக்கத்துக்காக " இருத்தல் " அல்லது " இரு. " என்பது " அவோர்டுபோஸ் " எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் முறையாகக் கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

7. இக்கட்டளையால் அம்பாந்தோட்டை நகரசபை எல்லைக்குள் மாசிக் கருவாட்டை மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும் சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச் சீட்டு ஒன்றைக் கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்பனை செய்யப்பட்ட மாசிக் கருவாட்டின் தொகை (நிறையில்) ;

(இ) விற்பனை செய்யப்பட்ட தொகைக்குக் கொடுக்கப்பட்ட விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது.

8. இக்கட்டளையால் மாசிக் கருவாடு விற்குமிடத்து குறிப்பிட்ட அட்டவணையின் 2, 5, 6, 7 பத்திகளில் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளை சுற்றிக்கொடுக்கும் உறை அல்லது கொள்கலம் ஏதாவது உபயோகப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

கையொப்பமிட்டது அம்பாந்தோட்டையில், திகதி 7.2.1959, நேரம் : காலை 11.30.

ட. சிவஞானம்,
விலைக் கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு),
அம்பாந்தோட்டை மாவட்டத்திற்கு.

### அட்டவணை

| | மொத்த வியாபாரியின் நிகர அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலை | | | | சில்லறை வியாபாரியின் நிகர இருத்தல் ஒன்றின் ஆகக்கூடிய சில்லறை விற்பனை விலை | |
|---|---|---|---|---|---|---|
| பத்தி 1 | பத்தி 2 | பத்தி 3 | பத்தி 4 | பத்தி 5 | பத்தி 6 | பத்தி 7 |
| விபரம் | பெலியத்தை தங்கல்லை தெத் துவாவல மஹவெல | ஹம்பாந்தோட்டை அம்பலாந்தோட்டை வலஸ்முல்லை ரன்ன வீரகெடிய | திஸ்ஸ | கடுவனை கிராம மித்தெனிய | ட. ஆர். ஓ வின் பகுதி வெஸ்ட் கிருவாபத்து | ட. ஆர். ஓ க்களின் பகுதி மாகம்பத்து ஈஸ்ட் கிருவாபத்து |
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| மாசிக்கருவாடு | 244 86 | 245 21 | 245 51 | 245 36 | 2 44 | 2 45 |

குறிப்பு :—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருளை விற்க வேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல, இவை ஆகக்கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருளை விற்றலாகாது.

---

உணவு விலைக்கட்டளை இல. என். ஈ. 44. — உப உணவுப் பொருட்கள் (மாசிக் கருவாடு).

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2)ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினால் உப விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு) அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு உப விலைக் கட்டுப்பாடு அதிகாரி (உணவு), ஆத்தர் கதபாட் பர்தோலோமியுஸ் ஆகிய நான் இக்கட்டளையால்—

1. 1958 ம் ஆண்டு 15 ம் திகதியைக் கொண்ட 11,525 ம் இலக்க இலங்கை அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில் 1958 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 10 ம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட என். ஈ. 39 ம் இலக்கமுள்ள உணவு விலைக் கட்டளையில் மொத்த வியாபாரியின் ஆகக்கூடிய மொத்த விலை ; சில்லறை வியாபாரியின் ஆகக்கூடிய சில்லறை விலை முதலியவற்றைப் பொறுத்தமட்டில் குறித்த " அ ", " ஆ " அட்டவணைகளின் முறையே 12 ம் பத்திகளில் விவரிக்கப்பட்டு இருக்கும் விலைகளியும் 2 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள மாசிக் கருவாடு பற்றிய எனது விலைக்கட்டளையையும் 1959 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 1ந் திகதியிலிருந்து எடுத்துவிடுகிறேன்.

2. இதனோடிருக்கும், " அ ", " ஆ " அட்டவணைகளின் 3 ம் பத்தியில் விவரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே நிகர அந்தர் ஒன்றின் மொத்த வியாபாரியின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலையாகவும், நிகர இருத்தல் ஒன்றைச் சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும் 1959 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 1 ந் திகதியிலிருந்து விதிக்கிறேன் ; குறித்த " அ ", " ஆ " அட்டவணைகளில் 2 ம் பத்திகளில் நேரொத்த பதிவில் விவரிக்கப்பட்ட மாசிக்கருவாட்டை இந்த விலைக்கு கூடுதலாக 1 பத்தியில் குறிக்கப்பட்ட எல்லைக்குள் விற்றலாகாது.

3. இக்கட்டளையின் நோக்கத்துக்காக—

(அ) எத்தொகையான மாசிக் கருவாட்டையோ திருப்பி விற்பதற்காக விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படும் என்றும் ஆஞ்ஞையிடுகிறேன் ;

(ஆ) எத்தொகையான மாசிக் கருவாட்டையோ பாவிப்புக்காக அல்லது உபயோகத்துக்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படு மென்றும் ஆஞ்ஞையிடுகிறேன்;

(இ) ஒரு நிகர அந்தருக்குக் குறைந்த அல்லது கூடிய மாசிக் கருவாடு மொத்தமாக விற்கப்படின், இங்கு குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய மொத்த விற்பனை விலையிலிருந்து தக்கவாறு வழமைபோல் கணக்குப் பார்க்கப்படவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

4. இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதித்த எல்லைக்குள் மாசிக் கருவாட்டை வேறொரு பொருளோடு கலந்து விற்றலாகாது என் ஆஞ்ஞையிடுகிறேன்.

5. இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதித்த எல்லைக்குள் மாசிக் கருவாட்டை தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது வைத்து இருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் குறித்த "அ" "ஆ" அட்டவணையில் விவரித்துள்ள மாசிக் கருவாட்டுக்கு அவ்விடப்பரப்பில் இக்கட்டளையால் விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளைக் காட்டும் அறிவித்தல் ஒன்றைப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்திருத்தல் வேண்டுமென் இத்தால் ஆஞ்ஞையிடுகிறேன்.

6. இக்கட்டளையின் நோக்கத்துக்காக "இருத்தல்" அல்லது "இரு." என்பது "அவோர்டுபோஸ்" எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் முறையாகக் கருதப்படு மென்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

7. இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதித்த எல்லைக்குள் மாசிக் கருவாட்டை மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும், சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்றுருக்கும் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச் சீட்டு ஒன்றைக் கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்பனை செய்யப்பட்ட மாசிக்கருவாட்டின் தொகை (நிறையில்) ;

(இ) விற்பனை செய்யப்பட்ட தொகைக்குக் கொடுக்கப்பட்ட விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது.

8. இக்கட்டளையால் மாசிக் கருவாடு விற்குமிடத்து குறிப்பிட்ட "அ" "ஆ", அட்டவணையின் 3 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளை சுற்றிக் கொடுக்கும் உறை அல்லது கொள்கலம் ஏதாவது உபயோகப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

9. இக்கட்டளை உடஹேவாஹெட்ட பிரிவு அதிகாரி பகுதிக்குரியதல்ல.

1959 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 1 ம் திகதி முற்பகல் 11 மணிக்கு நுவரேலியக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

எ. சி. பர்தோலோமியுஸ்,
உதவி விலை கட்டுப்பாட்டதிகாரி (உணவு), நுவரேலிய.

## அட்டவணை "அ"

| பத்தி 1 எல்லைகள் | | பத்தி 2 விபரம் | பத்தி 3 மொத்த வியாபாரி யின் நிகர அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலை ரூ. ச. |
|---|---|---|---|
| 1. | நுவரேலியா நகர சபைப் பகுதி | மாசிக்கருவாடு | 251 72 |
| 2. | கந்தபொலை | | |
| 3. | நானுஓயா | | |
| 4. | ரம்படை டவுன் | | |
| 5. | சங்கிலிபாலம | | |
| 6. | குடாஓயா | | |
| 7. | பூண்டலோயா | | |
| 8. | சிலப்பனே கோறளை | | |
| 9. | பல்லேபனே கோறளை | | |
| 10. | மொரபே | | |
| 11. | டிலிகுல்றி | | |
| 12. | டயகம | | |
| 13. | ஆகரபதன | | |
| 14. | மெதபனே கிராமச் சங்கப் பகுதி | | |
| 15. | ராகலை | மாசிக்கருவாடு | 252 82 |
| 16. | உடபுஸ்சல்லாவ | | |
| 17. | நெல்தண்டாவுஹீன்ன | மாசிக்கருவாடு | 256 48 |
| 18. | ஹாஸ்பத்த | | |
| 19, | வத்துமுல்ல | | |
| 20. | கும்பல்கமுவ | | |
| 21. | டிம்புள்ள | மாசிக்கருவாடு | 248 79 |
| 22. | வட்டகொடை | | |
| 23. | தலவாகொல்லை | | |
| 24. | லிந்துல்ல | | |
| 25. | வலாஹா | | |
| 26. | கொட்டகொலை | | |

**குறிப்பு** :—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருளை விற்க வேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல. இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருளை விற்கலாகாது.

## அட்டவணை "ஆ"

| பத்தி 1 எல்லைகள் | | பத்தி 2 விபரம் | பத்தி 3. மொத்த வியாபாரி யின் நிகர இருத்தல் ஒன்றின் ஆகக்கூடிய சில்லறை விற்பனை விலை ரூ. ச. |
|---|---|---|---|
| 1. | நுவரேலியா நகர சபைப்பகுதி | மாசிக்கருவாடு | 2 52 |
| 2. | நானுஓயா | | |
| 3. | கந்தபொல | | |
| 4. | ராகலை | | |
| 5. | உடபுஸ்சல்லாவ | | |
| 6. | ரம்படை டவுன் | | |
| 7. | சங்கிலிபாலம | | |
| 8. | குடாஓய | | |
| 9. | பூண்டலுஓய | | |
| 10. | திஸ்பனே கோறளை | | |
| 11. | பல்லேபளே கோறளை | | |
| 12. | மொரபே | | |
| 13. | டிலிகுல்ரி | | |
| 14. | டயகம | | |
| 15. | ஆகரபத்தன | | |
| 16. | மெதபனே கிராமச்சங்கப் பகுதி | | |
| 17. | டிம்புள்ள் | | |
| 18. | வட்டகொடை | | |
| 19. | தலவாகொல்லை | | |
| 20. | லிந்துல்ல | | |
| 21. | வலஹா | | |
| 22. | கொட்டகொலை | | |
| 23. | அம்பேவெல | மாசிக்கருவாடு | 2 59 |
| 24. | நெல்தண்டாஹீன்ன | | |
| 25. | ஹாஸ்பத்த | | |
| 26. | வத்துமுல்ல | | |
| 27. | கும்பல்கமுவ | | |
| 28. | ருபாஹா | மாசிக்கருவாடு | 2 60 |

**குறிப்பு** :—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருளை விற்க வேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல. இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருளை விற்கலாகாது.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது